**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்–2, கொடைக்கானல்.**

**STC. No. 55/2023**

**தேதி : 04.08.2026.**

**DW.1 – பாண்டி சக்தி த/பெ. பாண்டி சேகர்.**

(1969ம் ஆண்டின் 54வது விதியின் 9 வது பிரிவு ஏற்பாட்டின் படி கிரேடு III, திரு. சிவக்குமார் என்பவரால் **D.W.1** செய்விக்கப்பட்டு, அவரின் வாக்குமூலம் பதிவு சத்தியப்பிரமாணம் செய்யப்படுகிறது)

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கின் புகார்தாரர் இளங்கோவன் என்பவரை யார் என்று தெரியாது என்றும், அவரிடம் நான் எந்தவொரு காசோலையையும் கொடுக்கவில்லை என்றும், கூறினேனா என்றால் கூறினேன். மேற்கூறியவற்றை பற்றி என்னுடைய வழக்கறிஞர் புகார்தாரரிடம் அவரது குறுக்கு விசாரணையில் கேட்டாரா என்றால் கேட்டேன் என்று தான் என்னிடம் கூறினார். நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள விசயங்கள் குறித்து என்னுடைய வழக்கறிஞரிடம் கூறினேனா என்றால் கூறினேன். மேற்கூறியவற்றை பற்றி என்னுடைய வழக்கறிஞர் புகார்தாரரிடம் அவரது குறுக்கு விசாரணையில் கேட்டாரா என்றால் கேட்டேன் என்று தான் என்னிடம் கூறினார். என்னிடம் காட்டப்படும் புகார்தாரர் குறுக்கு விசாரணையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளதா என்றால் காசேலையை குறித்து எனது வழக்கறிஞர் எதுவும் கேட்கவில்லை. என்னுடைய தனிப்பட்ட விபரங்கள் பற்றி கேட்டுள்ளார். புகார்தாரருக்கு அதில் யாவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். நான் நிறைய நபர்களிடம் கடனை வாங்கி கொண்டு திரும்பி செலுத்ததாமல் பழக்கமாக கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல . நான் நீதிமன்றத்தில் பல உண்மைகளை மறைத்து பொய்யாக சாட்சயம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பாக சுமார் 38 நபர்களிடம் வாங்கிய கடனை திரும்பி செலுத்த முடியாத காரணத்தினால் தேனி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து , அது தேனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு IP 31/2022 என்று நிலுவையில் இருந்து அந்த வழக்கில் நான் ஆஜராகததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**தற்போது என்னிடம் காட்டப்படும் மாண்புமிகு தேனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த நொடிப்பு நிலை மனு எண். 31/2022 ல் பிறப்பித்த உத்தரவு இணையவழி நகல் என்றால் சரிதான். அது ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய நண்பர் பிரபுவும், நானும் இதே போல் நிறைய நபர்களிடம் கடனை வாங்கி கடனை திரும்ப செலுத்தாமல் அவர் மீது பல காசோலை மோசடி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நிரஞ்சனா தேவியிடம் நான் வாங்கிய கடனுக்காக ரூபாய்.50 ஆயிரத்தை திரும்பி செலுத்தியதற்கான ஆவணம் எதுவும் என்னிடத்தில் உள்ளதா என்றால் இல்லை. நான் மேலே கூறியவாறு நான் தொடுத்த வழக்கில் சுமார் 38 நபர்களுக்கு நான் கடன் தொகையை திரும்ப செலுத்தாமல் ஏமாற்றியது போல் இவ்வழக்கின் புகார்தாருக்கும் நான் கடன் தொகையை திரும்ப செலுத்தாமல் ஏமாற்றினேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் யார் என்றே எனக்கு தெரியாது. இவ்வழக்கின் புகார்தாரரான இளங்கோவன் என்பவர் எனக்கு யார் என்று தெரியாது என்றும், நான் வழக்கிற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் ஏமாற்ற வேண்டும் என்று நினைத்திருந்தால், நான் தேனி மாவட்டம் மாண்புமிகு கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நொடிப்பு மனு தாக்கல் செய்திருக்க மாட்டேன். நான் தொடுத்த வழக்கில் நான் ஆஜராகமால் நீதிமன்றத்தையும் ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல, நிரஞ்சனா தேவி என்பவரின் மிரட்டலுக்கு பயந்து தான் நான் ஆஜராகவில்லை, இந்த வழக்கிலும் கடும்அச்சத்துடன் தான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நிரஞ்சனா தேவி என்பவர் என்னை மிரட்டியுள்ளது குறித்தும், தற்போது நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிப்பதற்கு கடும் அச்சத்துடன் வந்ததற்கு காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார்தாரர் இளங்கோவன் என்பவருக்கும், நிரஞ்சனா தேவி என்பவருக்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் இளங்கோவன் என்பவரிடம் ரூபாய். 50 ஆயிரத்தை வாங்கிக்கொண்டு, அவரை ஏமாற்ற வேண்டும் எண்ணத்தில் நான் அவருக்கு காசோலை கொடுத்து ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதற்காக நிரஞ்சனா தேவி என்பவரின் மீது காவல்நிலையத்தில்

புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால், அவர் படைபலன் கொண்டுள்ள நபர் என்பதால் அவருக்கு பயந்துகொண்டு நான் புகார் கொடுக்கவில்லை.

N.Thisho Nanth

Digitally signed by N.Thisho Nanth
Date: 2026.08.04 18:08:39 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்எண். 2,
கொடைக்கானல்.